1990 எப்ரல் 23]

9–55 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தமிழகம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் போடுகிற நேரத்தில் ஒரு மாத காலம் பணியாற்றிவிட்டு விடுப்பில் சென்று விடுகிறார்கள். அப்படி ஆண்டுக்கணக்கில் விடுப்பில் இருப்பதால் மருத்துவர்களே இல்லாத சூழ்நிலை தமிழகத்தில் பல மருத்துவ நிலையங்களில் இருக்கின்றன. இதைத் தவிர்க்கிற வகையில் ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நியமிக்கப்படுகிற மருத்துவர்கள் தொடர்ந்து பணியாற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்த அரசு தற்காலிக டாக்டர்களை நியமிப்பது என்ற நிலையை உருவாக்கி, 500 டாக்டர்களை இன்றைக்கு நியமித்திருக்கிறது. அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்படுகிறபோது நீண்ட கால விடுப்பில் செல்லமுடியாது. 1–2 நாட்கள் விடுப்பு எடுத்தால் கூட அப்படி விடுப்பு எடுத்த டாக்டர்கள் நீக்கப்படும் வாய்ப்பை அரசு பெற்றிருக்கிறது. ஆகவேதான் இந்த தற்காலிக டாக்டர்களை நியமித்திருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டிய குறைகளை நீக்குகிற வகையில் இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் பிடிக்கும் உரிமை.

2191. திரு. நா. இராமகிருஷ்ணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் அணையில் மீன் பிடிக்கும் உரிமை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்திலுள்ள பெரியார் நீர்த் தேக்கத்தில் உள்ளூர் மீனவர்களைக் கொண்டு பங்கு அடிப்படையில் மீன் துறையால் மீன் பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உரிமை அங்கே பறிக்கப்பட்டிருக்கிறது. நில உரிமை கேரளாவுக்கு சொந்தமானாலும், நீர் உரிமையும் பராமரிப்புச் செலவுகளும் அனைத்துமே நமது அரசுக்கு இருக்கிறது என்ற காரணத்தால், இன்னும் அதிகமாக அங்கே மீனவர்களை வைத்து மீன் பிடித்தால், நிச்சயமாக அதிகமான வருவாயைப் பெற முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த உரிமையைப் பெறுவதற்கு நமது அரசு கேரள அரசுடன் பேச முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நீர்த் தேக்கத்தில் எந்த அடிப்படையில் மீன் பிடிப்பு உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது என்பது தான் மூலக் கேள்வி. பங்கு அடிப்படையில் மீன் பிடிக்க அங்கே உள்ள மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு உரிமை வழங்கப்படுகிறது. அப்படி மீன் பிடிக்கும் போது, பிடிப்பவர்களுக்கு 1/3 பங்கும், துறைக்கு 2/3 பங்கும் என்ற அளவில் வழங்கப்படுகிறது. தங்களுக்குக் கிடைக்கும் மீன்களை அவர்களே விற்பனை செய்து கொள்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி தெளிவாக இல்லாததால் புரியவில்லை. தனியாக வினா எழுப்பினால் விடை அளிக்க இயலும்.

கால்நடை மருந்தகங்கள்.

* 2402. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் கால்நடை மருந்தகங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் கால் நடைகள் வளர்ப்புக்கு ஏற்ற இடங்களாக உள்ளன. பின் தங்கிய இந்த தாலுக்காக்களின் வளர்ச்சிக்கு கால் நடை வளர்ப்புக்கு ஏற்ற இடங்களாக இருந்தும் மருந்தகங்கள் இல்லாததால் பெரும்பாலான கால் நடைகள் நோய்களால்